# தமிழ்ச்சிட்டு

விலை:
உரு.3.00

குரல் 25
இசை 10

துலை 2033
( அத்தோபர் - 2002 )

சிறுவர் கலை
இலக்கியத் திங்களிதழ்



# பெற்றவள் உவகை!

## எடுப்பு

காட்டுப் புலியடி என்மகன் — தமிழ்
நாட்டுக்குப் பழியொன்று வாய்ந்திடிற் பாய்ந்தெழும்
(காட்டுப்)

## தொடுப்பு

கூட்டுக்குள் இருப்பது போலென் சொல் — கட்டுப்
பாட்டுக்குள் இருப்பினும் பைந்தமிழ் நைந்திடில் (காட்டுப்)

## முடிப்பு

வீட்டுக்குள் என்னிடம் அஞ்சினும் — இரா
வேளையில் அவளிடம் கொஞ்சினும்— பண்புக்
கோட்டுக்குள் நின்றவன் வாழினும் — தமிழ்க்
கேட்டினுக் கவன்பொறான் யார்வந்து சூழினும் (காட்டுப்)

ஏட்டுப் படிப்பினில் மன்னவன் — தமிழ்க்
கேகும் படையினில் முன்னவன்—தனை
மாட்டுஞ் சிறைக்கவன் பின்னிடான்—அவன்
மனைவியைக் குழந்தையை என்னையும் எண்ணிடான்
(காட்டுப்)

வாட்டும் வறுமையைப் பார்த்திடான்— பிறன்
வன்சொலைக் கேட்டவன் வேர்த்திடான் — உடற்
கூட்டுக்குள் உயிருள்ள வரையினில் — தமிழ்க்
காதலில் எந்நாளுங் கங்கு கரையிலன் (காட்டுப்)

**பாவலரேறு பெருஞ்சித்திரனார்** **- 1954**

தமிழ்ச்சிட்டு

சிறுவர் கலை இதழ்

குரல்–25 இசை–10

"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

– பாவலரேறு

நிறுவனர்:
**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

ஆசிரியர்:
**தாமரை பெருஞ்சித்திரனார்**

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
**'தமிழ்ச்சிட்டு'**
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை– 601 302.
தொலைபேசி எண் : 277 1231

# காலம் அறிதல்

இயல்பாக ஊர்ப்புறங்களில் இந்தப் பழமொழியைக் கேட்டிருப்போம்.

சிலர் சலிப்பாகச் சொல்லுவார்கள்: "உப்பு விற்கலாம் என்று போனால் மழை வருகிறது; தவிடு விற்கலாம் என்று போனால் காற்றடிக்கிறது.

இந்தப் பழமொழியை மேலோட்டமாகப் பார்த்தால் ஏதோ மழை பொழிவதும், காற்றடிப்பதும் தவறு போல இருக்கும்.

ஆனால் மழை பொழிவதோ, காற்றடிப்பதோ தவறில்லை.

அந்தக் காலத்தில் நாம் அதைச் செய்ய முனைவதுதான் தவறு.

ஒரு வேலையைச் செய்கிற போது அந்த வேலையைச் செய்கிற காலத்தை முதலில் பார்க்க வேண்டும்.

காலத்தை இரண்டு நிலைகளி லிருந்தும் அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

ஒன்று நமக்குக் காலம் சரியாக இருக்கிறதா என்பது. நாம் அந்தப் பணியைச் செய்கிற அளவில் இருக்கிறோமா? நம் உடல்நிலை, மனநிலை, பொருள்நிலை எல்லாம் சரியா?—இதை அளவிட வேண்டும்.

அடுத்து புறநிலைச் சூழல்களைப் பார்ப்பது. அந்த வேலையைச் செய்யத் தகுந்த சூழலா எனக் கவனிப்பது.

மழைக் காலமா? இந்த நேரத்தில் இதைச் செய்யலாமா? என முழுமையாகப் பார்க்க வேண்டும்.

இப்படி ஆராயாமல் செய்தால் அந்த வேலையைத் திறம்பட செய்ய இயலாது.

வேலையை மட்டும் அன்று; உணவுப் பழக்க வழக்கங்களிலும் அப்படித்தான் நாம் இருத்தல் வேண்டும்.

அந்தஅந்த காலத்தில் எந்தஎந்த காய்கறிகள் பழங்கள் மிகுதியாகக் கிடைக்கின்றனவோ அவற்றையே உண்பது.

அப்படிச் சாப்பிடுவதே உடலுக்கு நலத்தைக் கொடுக்கும்; இல்லையானால் நோய்தான் வரும்.

அதேபோன்று, முன்பு உண்ட உணவு செரித்துவிட்டதா என்பதன் காலம் அறிந்தே அடுத்த வேளை உணவை உண்ண வேண்டும்.

உணவு வயிற்றில் இருக்கும்போதே இன்னும் விடாமல் சாப்பிட்டால் நோய் நம்மைப் பற்றிக் கொள்ளும்.

எனவே காலம் அறிதல் என்பது முகாமையானது.

காலத்தை அறிவதும், காலத்தால் செய்வதும் கட்டாயம் தேவையுடையது.

காலத்தால் செய்வது எனில், விரைந்து அதேபோது எச்சரிக்கையாகச் செயல்படுவது.

இவ்வாறு செய்தால் எந்தத் தவறும் வராது.

ஆனால் மூடநம்பிக்கைகள் அதிகம் பரப்பப்படுகிற இந்தக் காலத்தில் காலத்தால் செய்வது என்பதை வேறு வகையில் விளங்கிக் கொள்கின்றனர்.

'இராகு' காலம் 'எம கண்டம்' பார்ப்பது அறிவுடைய பார்வை இல்லை.

நாம் எந்த வேலையைச் செய்கிறபோதும் அது அறிவுக்கு உட்பட்ட அறிவியலுக்குப் பொருந்தியதாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

அறிவியலுக்குப் பொருந்தாத செயல்கள் பொய்யானவையும், ஏமாற்றுபவையுமே ஆகும்.

மழை பொழிவதில்லை என்று சொல்லி வேள்வி என்கிற 'யாகம்' நடத்துவது அறிவற்றது.

மழை ஏன் பொழியவில்லை எனக் காரணம் அறிந்து செய்ய வேண்டியதே அறிவு.


மற்றதெல்லாம் ஏமாற்றுவது.


எனவே, உண்மையாகக் காலம் அறிவது என்பது நம் நிலையிலிருந்தும், இந்தக் காலச் சூழலிலிருந்தும் கவனிக்கப் பெற வேண்டியது.

எனவே அறிவால் காலம் அறிந்து செயல்படுவோம்! ❐

# தாமரை

1. படத்தில் உள்ளதுபோல் சுருளைப் பாதிஅளவு வெட்டவும்.






2. பின் இலை வடிவத்தில் வெட்டுங்கள்.

3. இதழ்களைக் கீழ்நோக்கி மடிக்கவும்




4. சுருள் நுனியில் பிடித்து இழுக்கவும்.




5. இதழ்ப் பக்கம் தாளைத் திருப்பவேண்டும்






6. நடுப்பக்கத்தை அழுத்த வேண்டும்

7. கீழ் இதழ்களை மடக்கி வைத்தவுடன் நீங்கள் செய்த தாமரைப் பூ கிடைக்கும்.



# முதல் உதவி

* காயத்தில், குருதி வடிந்தால் அதை உடனே நிறுத்த முயல வேண்டும். குருதி வந்தால், அது தமனியிலிருந்து வருகிறது என அறியலாம் இந்தக் குருதியை நிறுத்த, காயத்தின் மேற்பக்கமாக (நெஞ்சாங்குலை பக்கமாக) ஒரு கைக்குட்டையை மடித்து நடுவில் ஒரு முடிச்சுப்போட்டு, அதை வைத்து அழுத்தமாக இறுகக் கட்டவேண்டும். இவ்வாறு செய்வதால் நெஞ்சாங் குலையிலிருந்து வரும் குருதி அடிபட்ட இடத்திலிருந்து வெளியேறி வீணாவதைத் தடுக்கலாம். காயத்திலிருந்து குருதி ஒரே சீராக வருமானால், அது சிரையிலிருந்து வடிகிறது எனக் கொள்ளவேண்டும். அக் காயத்திற்குக் கீழே (நெஞ்சாங் குலைப் பக்கமில்லாமல்) பஞ்சுப்பட்டை ஒன்றை வைத்து இறுகக் கட்ட வேண்டும். இக் கட்டுகளை 15 நிமையத்திற்கு ஒருமுறை சிறிது நெகிழ்த்தவும் இறுக்கவும் வேண்டும்.




தமனியிலிருந்து வரும் இரத்தத்தை நிறுத்த காயத்தின் மேற்பக்கமாக ஒரு துணியின் நடுவில் முடிச்சுபோட்டு இறுக்கி கட்டப்படு கிறது.

* நீந்தத் தெரியாதவர்கள் தண்ணீரில் விழுந்துவிடலாம். மூக்கு வழியாகவும் நீர் உட் சென்றிருக்கும். அதனால் மூச்சுவிட முடியாமல் திணறுவார்கள். எனவே, அவர்களைக் கரைசேர்த்ததும்

தலைகீழாகத் தூக்கிப் பிடித்தால் மூக்கின் வழியாக நீர் வெளியேறும். மீண்டும் தலைக்கு மேலே தூக்கி வேகமாகச் சுற்றினால் வாந்தி மூலம் நீர் வெளியாகும். அதன் பின்னும் மூச்சு வரவில்லை யென்றால் செயற்கை முறையில் மூச்சு வருமாறு செய்ய வேண்டும்.

✻ நெருப்பிலோ, மின்சாரம் பாய்ந்தோ, எரியம் பட்டோ ஒருவர் உடலில் தீப் பிடிக்கலாம். தீப்பிடித்த பகுதி மேலாக இருக்கும்படி அவரை உடனே தரையில் படுக்க வைத்து எடையான விரிப்புத் துணி அல்லது போர்வையைப் போர்த்தி உருட்டித் தீயை அணைக்கவேண்டும். உடனே படுக்க வைக்காவிட்டால் தீ தலைக்குப் பரவிவிடும். மின்சார அதிர்ச்சி உண்டானால், உடனே மின்சார ஓட்டத்தை நிறுத்த வேண்டும். தாக்கப்பட்டவர் மயக்கமடைந்தால், அவரைப் படுக்கவைத்து அவர் உடல் முழுவதையும் நன்கு தேய்த்து விடவேண்டும். அவ்வாறு செய்வதால், அவர் உடலில் குருதி ஓட்டம் மீண்டும் சீராக நடைபெறும்.



மூச்சுவிட திணறுபவர்களுக்குச் செயற்கை முறையில் மூச்சு வரச்செய்தல்.

❑

**தமிழ் மருத்துவக் கட்டூர்(முகாம்) : 3**

வரும் துலை 5 (20.10.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் முழு நாளும் தமிழ் மருத்துவக் கட்டூர் நம் 'பாவலரேறு தமிழ்க்கள'த்தில் (சென்னை - மேடவாக்கம்) நடைபெற இருக்கிறது.

அன்பர்கள் தவறாமல் வந்து பயன்பெறவும்.

பாவலரேறு தமிழ்க்களம்,

மேடவாக்கம் கூட்டுச் சாலை நிறுத்தம் அருகில், மேடவாக்கம்,
சென்னை - 601 302. தொலைபேசி : 044-2771231

# மூச்சு விடும் போது...

சினவயப்படும்போது, சிலருக்கு உடல் நடுங்குவது ஏன்?
சினமாக இருக்கும்போதும், சினமாகப் பேசும்போதும் ஒருசிலரின் தானியங்கு நரம்பு மண்டலமும், நாளமில்லாச் சுரப்பிகளும் அதிவேகமாகத் தூண்டப்படுகின்றன. சுரப்பியின் அதிகப்படியான தூண்டுதலினால் கொஞ்சம் படபடப்பும் வேகமாக மூச்சு விடுதலும், நடுக்கமும் ஏற்படுகின்றன.

நாம் தூங்கும்போது வாயைத் திறந்துகொண்டு தூங்கக்கூடாது, வாயால் மூச்சு விடக்கூடாது ஏன்?
மூக்கால் மூச்சிழுப்பதும், விடுவதுவுமே சரியான முறை. மூக்கில் எண்ணிலா முடிகள் உள்ளன. நாம் காற்றை உள்ளேயிழுக்கும்போது, அக் காற்றில் உள்ள தூசுகளையும், கேடு விளைவிக்கும் நுண்ணுயிரிகளையும் மூச்சுக் குழல் வழியாக நுரையீரலுக்கு சென்றுவிடாதபடி அவை தடுத்து விடுவதோடு, மூக்கின் வழியாகக் காற்று செல்லும்போது அது சூட்டையும், ஈரத்தையும் பெறுகிறது.

வாயால் மூச்சு விடும்போது அல்லது வாயைத் திறந்துகொண்டு தூங்கும் போது காற்றில் உள்ள தூசுகள் வடிகட்டப்படுவதில்லை. கதகதப்பும், ஈரமும் பெறாமலேயே காற்று முன்தொண்டைக்குள் நுழைகிறது. அதனால் தொண்டை காய்ந்து வறண்டு 'கோழை' ஏற்படுகிறது. அதனால் இருமலும் நீர்க்கோவையும் ஏற்பட்டு உடல்நலத்தை ஊறுபடுத்தும் நிலை உண்டாகிறது.

## கேட்டைக் குறைக்க வழி

தொலைக்காட்சி பார்க்கும்போது ஒளி நம் கண்களைச் சோர்வடையச் செய்து விடும். அது கண் நலத்தை கெடுக்கும். எனவே, படத்தின் ஒளியைக் குறைக்க மங்கலான ஒளியுள்ள விளக்கைப் போட்டுக் கொண்டால் அதிகப்படியான கேட்டைக் குறைத்துக் கொள்ளலாம்.

# நிமிர்ந்து உட்கார வேண்டும்

நாம் ஏன் முதுகை வளைத்துக் கொண்டு உட்காரவோ, நிற்கவோ கூடாது? உடலுக்குப் போதுமான உயிர்வளி கிடைக்க வேண்டுமானால், நுரையீரல் நன்றாக விரிந்து அதன் வேலைகளைச் செய்யவேண்டும், காற்றை உள்ளிழுக்கும்போது, நுரையீரல் நன்கு விரிய வேண்டுமானால், நாம் நிமிர்ந்து உட்கார வேண்டும். நிற்கும்போதும் முதுகந் தண்டை வளைக்காமல் நிமிர்ந்து நிற்கவேண்டும்.

## காதுகளை மூடிக் கொண்டால் குளிர் குறைவாகத் தோன்றுவது ஏன்?

குளிர்காலத்தில் காதுகளை மூடிக் கொண்டால் குளிர் குறைவாகத் தோன்றுவது ஏன்?

காதுகளில் உள்ள துளைகளின் வழியாகக் குளிர்ந்த காற்று உள்ளே செல்வதால் குளிர் ஏற்படுவதை உணர்கிறோம். துளையை அடைத்துக் கொண்டால் அல்லது மூடிக் கொண்டால் குளிர்ந்த காற்று அதிகமாக உள்ளே செல்லாது; எனவே குளிர் குறைவாகத் தெரிகிறது.

நம் காதுகளில் குளிர் உணர்ச்சியை விரைந்துணரும் ஆற்றலுள்ள செல்கள் உள்ளன.

— தொகுப்பு: பெ. குமாரி, ஆசிரியை

## அழுவது உடலுக்கு நல்லது ஏன்?

கண்ணின் நலத்திற்குக் கண்ணீர் நல்லது. கண்ணீரில் நுண்ணுயிரிக் கொல்லி இருக்கிறது. அது நோயை உண்டாக்கும் நுண்ணுயிரின் செல் சுவரை அழிக்க வல்லது.


கண்ணீர் விட்டு அழுதபிறகு மன இறுக்கம் குறைகிறது. அழாமல் இருப்பவர்களின் மனம் இறுக்கமாக இருப்பதால் வயிற்றுப்புண், மலக்குடல் வீக்கம் போன்ற நோய்கள் வரும்.

அழுபவன் கோழை என்கிற பழமொழி உண்டு. அச்சப்பட்டழுதால் அப்படி அழுபவருக்குப் பெயர் கோழை. பொதுவாகச் சிறுநீர் கழிப்பது போன்றே கண்ணீர் விடுவதும் ஒரு கழிவு நீக்கும் செயலே ஆகும்.

—தொகுப்பு: கு.அ. தமிழ்மொழி

# ஓர் அறிஞரின் மயக்கம்

சீனாவில் சுவாங்-சி என்ற ஓர் அறிஞர் இருந்தார். அவர் எப்போதும் நண்பர்கள் புடைசூழ மகிழ்ச்சியாக இருப்பார். கலகலப்புடன் அனைவரையும் சிரிக்க வைத்துக்கொண்டு தானும் சிரித்துக் கொண்டிருப்பார். ஒருபோதும் அவர் கவலையாக இருக்க மாட்டார்.



ஒரு நாள் அவர் ஆழ்ந்த கவலையுடன் அமர்ந்திருந்ததை அவருடைய நண்பர்கள் பார்த்து வியப்படைந்தனர்.

உடனே அவர்கள் அவரை அணுகி, ''ஐயா, நீங்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பதைத் தானே நாங்கள் பார்த்திருக்கிறோம். எந்தச் சிக்கல்களையும் எளிதாக எடுத்துக் கொண்டு சிரித்துக் கொண்டிருப்பீர்களே. இன்றைக்கு என்ன கரணியமாக தாங்கள் கவலையாக இருக்கிறீர்கள். எங்களிடம் கூறுங்களேன். நாங்கள் அதைத் தீர்க்க முடியுமா என்று பார்க்கிறோம்'' என்றார்கள்.

அதற்குக் அவர், 'இல்லை இது உங்களால் தீர்க்க முடியும் என்று நான் எண்ணவில்லை' என்று கூறினார்.

நண்பர்களும் விடுவதாக இல்லை. "இதுவரை உங்களால் தீர்த்து வைக்க முடியாத சிக்கல் எதுவுமில்லையே. உங்களாலும் தீர்க்க முடியாத சிக்கலாக அது இருந்தால் அது கட்டாயம் ஒரு புதுமையான சிக்கலாகத்தான் இருக்க வேண்டும். கட்டாயம் அதை எங்களிடம் நீங்கள் கூறத்தான் வேண்டும்" என்று வலியுறுத்தினர்.

# தேவையற்ற முயற்சிகள்

கலைகளானாலும் கல்வியானாலும் பல தேவையில்லாதவற்றைக் கற்றுக்கொள்வதிலும் பயிற்சி கொள்வதிலும் நாம் வீணாக்கி விடுகிறோம்.

அறிவியல் வளர்ச்சியும் கல்வியும் குறைந்த அக் காலத்திலேயே 'கல்வி கரையில; கற்பவை நாள் சில' என்று பாடியுள்ளனர்.

---

"சரிநான் அதைச் சொல்கிறேன். அந்தச் சிக்கலுக்குத் தீர்வு கிடைக்குமென நானும் நினைக்கவில்லை. ஒன்றுமில்லை. நான் நேற்றிரவு ஒரு கனவு கண்டேன். நான் ஒரு மானாக இருந்து திரிந்து கொண்டிருப்பதாகக் கனவு கண்டேன். ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குத் துள்ளித் துள்ளிக் மகிழ்ச்சியாக ஓடிக் கொண்டிருந்தேன்".

"இதிலென்ன சிக்கல் இருக்கிறது? கனவில் மாந்தன் பல்வேறு வடிவங்கள் எடுப்பதுபோல் காண்பது இயல்பாக நிகழக்கூடியதுதானே" என்றனர் நண்பர்கள்.

"அது உண்மைதான். ஆனால் நான் காலையில் எழுந்தபோது என்னுள் ஒரு கேள்வியும் எழுந்தது. ஒரு மாந்தன்தன் கனவில் மானாக வடிவமெடுக்க முடியுமென்றால் ஒரு மானும் தன் கனவில் மாந்தனாக இருப்பதுபோல் வடிவமெடுக்க முடியுமல்லவா?" என்று கேட்டார் சுவாங்-சி.

"எடுக்கலாமே அதைப்பற்றி நமக்கென்ன?" என்றார் நண்பர்கள்.

"இல்லை நான் மாந்தனாக இருந்து மானாக மாறியிருப்பதுபோல் கனவில் கண்டேனா அல்லது ஒரு மானின் கனவில் இப்போது மனிதனாக இருப்பதுபோல் நான் இப்போது கனவு கண்டுகொண்டிருக்கிறேனா? எது உண்மை? யார் இதை முடிவு செய்வது?" என்று கேட்டார்.

நண்பர்கள் திகைத்து நின்றனர்.

அலெக்சாந்தர் ஒருமுறை உலகையெல்லாம் வெல்லவேண்டும் என்று நாடுநாடாக கடந்து வந்து கொண்டிருக்கும்போது கார்டியன் எனும் நகருக்கு வந்தார். அங்கு ஒரு பழமையான தேர் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. அந்தத் தேரில் ஒரு முடிச்சு போடப்பட்டிருந்தது. இந்த முடிச்சை அவிழ்ப்பவன் எவனோ அவனே உலகை வெல்லுவான் என்ற நம்பிக்கை அந்த நாட்டில் நிலவிக் கொண்டிருந்தது.

உலகை வெல்லப் புறப்பட்ட அவனிடம் அந்தச் செய்தியை அந்த ஊர் மக்கள் வந்து சொன்னார்கள். பலரும் முயன்று முடியவில்லை என்றும் கூறினார்கள்.

அலெக்சாந்தர் சற்றுநேரம் அந்த முடிச்சை உற்றுப்பார்த்தார். பின் தன் வாளை உருவி அந்த முடிச்சின் மீது வீசினார். முடிச்சு இரண்டு பட்டுவிட்டது.

பிறகு அலெக்சாந்தர், "சிக்கலான இந்த முடிச்சை எப்படி அவிழ்ப்பது என்று எண்ணிக்கொண்டே இருப்பவனால் இந்த உலகை வெல்ல முடியாது" என்று கூறிவிட்டு அடுத்த இடம் நகர்ந்தார்.

இதே போல் இன்னொரு நிகழ்ச்சி இராமக்கிருட்டிணர் வரலாற்றில் நிகழ்ந்தது.

ஒருமுறை ஓகமுனிவர் ஒருவர் இராமக்கிருட்டிணரிடம் வந்தார். "தான் பல கலைகள் கைவரப்பெற்றவன். நீரின்மேல் என்னால் நடக்கமுடியும்" என்று கூறினார்.

இராமக்கிருட்டிணர் "நீங்கள் நீரின்மேல் நடக்க எவ்வளவு காலம் பயிற்சி பெற்றீர்கள்" என்று கேட்டார்.

அதற்கு அவர் "பத்தாண்டுக்காலம் ஆனது" என்று ஆர்வத்துடன் கூறினார்.

"பத்துகாசு படக்குக்காரனுக்குக் கொடுத்துவிட்டு கடக்க வேண்டிய நிலைக்காக நீங்கள் பத்தாண்டுகள் செலவழித்திருக்க வேண்டியதில்லை" என்று இராமக்கிருட்டிணர் சொல்லிவிட்டு நகர்ந்தார்.

எனவே உலகில் பல பயனுள்ள செய்திகளையும் பயிற்சிகளையும் நாம் தேர்ந்துதான் பயின்று கொள்ள வேண்டும்.

# தெரிந்துகொள்ளக் காரிக்கக் காஞ்சம் சய்திகள்

* தவளைகள் மூச்சு உறுப்புகளாகத் தோல், நுரையீரல், வாய்க்குழி என மூன்றையும் பயன்படுத்துகின்றன.
* நுரையீரல்களில் காற்றுப் பைகளை உடைய உயிரிகள் பறப்பன.
* மண்டை ஓடுகளில் 8 எலும்பு; முக எலும்புகள் 14; மாந்த உடலில் மொத்தம் 206 எலும்புகள் உள்ளன. நீளமான எலும்பு தொடை எலும்பாகும். இதற்குப் 'பீமா' என்று பெயர்.
* நம் உடலில் காணப்படும் பெரிய சுரப்பி கல்லீரல்.
* அதிக ஆற்றலைத் தரும் உணவு கொழுப்பு ஆகும்.
* நுரையீரல்களில் உள்ள காற்று நுண்ணறைகளின் எண்ணிக்கை 3000 இலக்கம்.
* அனைவருக்கும் அளிக்கப் பயன்படும் குருதி 'ஓ' பிரிவைச் சார்ந்தது. ஓ... அப்படியா?
* நெஞ்சத்திலிருந்து குருதியை வெளியே எடுத்துச் செல்லுவது தமனி. குருதியை நெஞ்சத்திற்குக் கொண்டுவரும் குழாய்கள்... சிரைகள் ஆகும்.
* நோய்த் தொற்றை அழிக்கப் பயன்படுவன வெள்ளையணுக்கள். அவ் வெள்ளையணுக்கள் அதிகரித்தால் ஏற்படும் நோய்க்கு பெயர் உலூகேமியா.
* தென்னக வரலாற்றைப் பற்றி அறிய உதவும் அகழ்வாராய்ச்சி புதுச்சேரியில் உள்ள அரிக்கமேடு அகழ்வாராய்ச்சி... ஆனால் இன்று கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. தமிழகம் போல... தமிழினம் போல'
* உடன்கட்டை ஏறுதல் வில்லியம் பெண்டிங் கோமகன் ஆட்சியில் நீக்கப்பட்டது.
* கைம்பெண் திருமணத்தைச் சட்டமாக்குவதற்குப் போராடி வெற்றி பெற்றவர் இராசா ராம்மோகன்ராய்.

* நீரில் நீந்திக் கொண்டே தூங்கும் உயிரினம் - வாத்து
* மிகப் பெரிய கோள் வியாழன்; மிகச் சிறியது அறிவன்.
* முகம் பார்ப்பதற்கு பயன்படுவது - சமதளக் கண்ணாடி
* பேருந்து போன்ற ஊர்திகளில் பின்புறத்திலிருந்து வரும் ஊர்திகளைப் பார்க்கப் பயன்படும் ஆடி... குவி ஆடி.
* ஊர்திகளில் உள்ள முகப்பு விளக்குகளில் ஒளியைக் கொடுக்கப் பயன்படும் ஆடி குழி ஆடி.
* கிட்டப் பார்வை உள்ளவர்களுக்குக் குழி ஆடியும் எட்டப் பார்வை உள்ளவர்களுக்கு குவி ஆடியும் உள்ள கண்ணாடியை பயன்படுத்துவார்கள்.
* கதிரவனுக்கு அருகிலுள்ள கோள் - அறிவன். தொலைவில் உள்ள கோள் சேண்மம்(புளூட்டோ). நாம் வாழும் நிலவுலகத்தின் இருபுறமும், அருகில் உள்ள கோள்கள் வெள்ளி, செவ்வாய்.
* மிக குளிர்ச்சியான கோள் சேண்மம்(புளூட்டோ) மிக வெப்பமான கோள் வெள்ளி.
* மிக எடை அதிகமானதும் பெரியதுமான கோள் வியாழன். எடை குறைவான கோள் அறிவன். சிவப்புக் கோள் செவ்வாய்.
* கறுப்பு வயிரம் - நிலக்கரி; கறுப்புத் தங்கம் - மிளகு.
* பன்னாட்டு அறமன்றம் தி ஏக்கில்(நெதர்லாந்து) உள்ளது.
* கதிரவனிலிருந்து ஒளி நிலவுலகத்தை அடைய 8 நிமையம் ஆகிறது.
* ஓர் உருவாவில் பொருள்துறை செயலாளரின் கையெழுத்திருக்கும்.
* பம்பாய் மும்பை என்று 28.7.1995இல் பெயர்மாற்றம் செய்யப்பட்டது.

தொகுப்பு: பெ. குமாரி, புதுச்சேரி

## ஒ காறிக்கக் காஞ்சம் சய்திகள்

# தடை செய்யப்பட்ட தமிழ்நூல்கள்.

புலவர் குழந்தையின் — இராவண காவியம்.
தந்தை பெரியாரின் — புரட்சிமொழி
அறிஞர் அண்ணாவின் — ஆரிய மாயை
கோ. தங்கவேலனாரின் — தமிழ்நில வரலாறு

தமிழில் மிக நீண்ட நெடிய அகவலை வள்ளலார் இயற்றினார். 1560 வரிகள் அவை.

பரிமேலழகரின் திருக்குறள் உரையை மறுத்து எழுதியவர் புலவர் குழந்தை.

முதன்முதலில் திருக்குறள் மாநாட்டை நடத்தியவர் — தந்தை பெரியார்

# தமிழில் தன் வரலாறு எழுதியவர்கள்:

வ.உ.சி. — சுயசரிதை
உ.வே. சாமிநாதர் — என் சரிதம்
திரு.வி.க. — வாழ்க்கைக் குறிப்புகள்
நாமக்கல் இராமலிங்கம் — என் கதை

# பாவலர்கள் நடத்திய இதழ்கள்

பாரதியார் — இந்தியா
பாவேந்தர் — குயில், ஸ்ரீசுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்
கண்ணதாசன் — வானம்பாடி
பெருஞ்சித்திரனார் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்

ஒரே இரவில் பாவேந்தர் எழுதிய நூல் தமிழியக்கம். பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பாரதிதாசன் எழுதிய நூலே தடை செய்யப்பட்டது. அந்த நூல் தமிழியக்கம்.

## தனித்தமிழ் வளர்ப்போம்.

—க. சண்முகசிதம்பரம்—

தாய்மொழியில் பேசிடு
 தமிழ்வளர்க்கப் பேசிடு
தூயதமிழ்ச் சொல்லினில்
 துடுக்குடனே பேசிடு!

தனித்தமிழில் பேசிடு
 தயங்கிடாது பேசிடு
இனிக்கும்தமிழ் மொழியினில்
 இனிமையுடன் பேசிடு!

மகிழ்ச்சிபொங்கப் பேசிடு
 மறந்திடாது பேசிடு
இகழ்ந்துயாரும் கூறினும்
 இடித்துரைத்துப் பேசிடு!

## மலர்கள் எத்தனை?
## தேனீக்கள் எத்தனை?

அந்தத் தோட்டத்தில் தாமரைக்குளம் ஒன்று இருக்கிறது.
அதில் சில தாமரைப் பூக்கள் மலர்ந்திருந்தன.
அம்மலர்களில் சில தேனீக்களும் அமர்ந்தன.
மலர் ஒன்றுக்கு ஒரு தேனீயாக அமர்ந்தபோது ஒரு
தேனீக்கு இடமில்லை. எனவே,
மலர் ஒன்றுக்கு இரண்டு தேனீயாக அமர்ந்தபோது
ஒருமலர் மீதமிருந்தது. அப்படியானால்
குளத்தில் உள்ள மலர்கள் எத்தனை?
மலரை நாடி வந்த தேனீ எத்தனை?

மலர் - 3, தேனீ - 4.

# அணுமின் நிலையங்கள்

(2000 வரை)

## தற்போது இயங்குபவை.

| பெயர் | நிலைய ஆற்றல் | வெளித்தரும் ஆற்றல் | ஏற்படுத்தப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| தாராபூர் (1,2) (மகாராட்டிரா) | 2 X 210 | 420 | 1969 |
| ராசசுதான் (1,2,3 மற்றும் 4) (ரானாபிரதாப் சாகர்) | 4 X 220 | 880 | 1973, 1981 1995, 1996 |
| கல்பாக்கம் (1 மற்றும் 2) (தமிழ்நாடு) | 2 X 235 | 1330 | 1983, 1985 |
| நரோரா (1 மற்றும் 2) (உத்தரப்பிரதேசம்) | 2 X 235 | 1470 | 1990, 1991 |
| சுக்ராபூர் (1 மற்றும் 2) (சூரத்) | 2 X 235 | 2270 | 1991, 1992 |
| காய்கா (1 மற்றும் 2) (கர்நாடகா) | 2 X 235 | 2740 | 1995, 1996 |

## கட்டப்பட்டு வருபவை

| | | | |
|---|---|---|---|
| காய்கா (3,4,5,6) | 4 X 235 | 4150 | 2000 |
| கூடங்குளம் (1 மற்றும் 2) | 2 X 1000 | 9150 | 2000 |

## ஒன்று நடக்கும்; ஒன்று நடக்காது.

அண்ணாமலையார் அருள்குணம் உடையவர். இல்லையெனாது ஈந்து வாழ்பவர். ஏழை ஒருவன் வந்து தமக்கு அரிசியும் ஆடு ஒன்றும் வேண்டும் என்று கேட்டார்.

அண்ணாமலையார் "ஒன்று நடக்கும்; ஒன்று நடக்காது" என்றார். இதைக் கேட்ட அவன் தான் கேட்டதில் ஒன்று கிடைக்கும்; மற்றது கிடைக்காது என்று முகம் வாடி நின்றான். "எப்படியாவது இரண்டும் கிடைக்கச் செய்யவேண்டும்" என்று கெஞ்சினான்.

அண்ணாமலையார் அந்த ஏழையின் எண்ணத்தை உணர்ந்து நீ ஏன் வருந்தவேண்டும். நான்தான் இரண்டையும் கொடுக்கிறேனே. நீ கேட்ட இரண்டில் ஆடு நடக்கும், அரிசி நடக்காது அல்லவா அதைத்தானே சொன்னேன் என்றார்.

அண்ணாமலையார் ஊற்றுமலையரசரிடம் அழைத்துச் சென்று அவன் கேட்டவற்றை வாங்கிக் கொடுத்தார்.

*

---

## மான் எத்தனை ? மயில் எத்தனை ?

ஒரு தோட்டத்தில் மான்களும் மயில்களும் இருந்தன. அவை மடங்கு எண்ணிக்கையில் இருந்தன. மான், மயில் இரண்டின் கால்களும் சேர்ந்து நூறு இருக்கின்றன. அப்படியானால் மான்கள் எத்தனை? மயில்கள் எத்தனை? கால்களை எண்ணிய நேரத்தில் மான்களையும் மயில்களையும் எண்ணியிருக்கலாமே என்கிறீர்களா? மூளைக்கு வேலை கொடுக்க வேண்டாமா?

— விடை: அடுத்த பக்கம் பார்க்க.

த.நா. தலைமை அஞ்சலகத் தலைவர் 645/2002
T.N. P.M.G. (NR) 645/2002 தமிழ்ச்சிட்டு

# என்ன ஆட்டம் ஆடலாம்?

—பாவலர் இளஞ்சித்திரன்—

முதற்பெண்: நிலவும் வானில் வந்தது!
நெஞ்சில் இன்பம் துள்ளுது!
குலவி மகிழ்ந்திங் காடுவம்!
கூடிப் பெண்கள் ஆடுவம்!

2ஆம்பெண்: என்ன ஆட்டம் ஆடலாம்?
எந்த இடத்தைத் தேடலாம்?
முன்னம் வந்து கூறுங்கள்!
முன்வந் தொன்று சேருங்கள்!

3ஆம்பெண்: கண்ணா மூச்சி ஆடுவோம்!
கைகள் கொட்டி ஆடுவோம்!

4ஆம்பெண்: மண்ணா? மலையா? நல்லதே!
மகிழ்ச்சி தாவும் வல்லதே!

5ஆம்பெண்: ஓடிப் பிடித்தல் தான்சரி!

6ஆம்பெண்: ஒண்டி நொண்டி தான்சரி!

7ஆம்பெண்: சடுகுடு ஆட்டம் போடலாம்!
தமிழர் நம்புகழ் பாடலாம்!

8ஆம்பெண்: சில்லு கூட ஆடலாம்!
சேர்வோம்! ஒன்றாய்க் கூடலாம்!

முதல்பெண்: ஏடி ஆள்கள் போதுமா?
இப்படி நேரம் போகுதே!

2ஆம்பெண்: பூவா? தலையா? போடுவோம்!
போட்ட முடிவில் ஆடுவோம்!

## மான் எத்தனை? மயில் எத்தனை?

விடை: மான் - 20, மயில் - 10.

தமிழ்ச்சிட்டு, மேடவாக்கம், சென்னை - 601 302.